# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## நீதித்துறை (திருத்தம்)

***1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறை சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால்*
*2019, மாச்சு மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, பெப்புருவரி மாதம் 15 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***273 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 :** *இவ்வாசகம், 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்ட பிரிவின் சட்டப்பயனாவது ஏதேனும் நிருவாக மாவட்டத்திற்கு சமாதான நீதவான்களை நியமிக்கப்படுவதற்கு இயலச்செய்கின்றது என்பதுடன் இக்காப்பு வாசகம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் ஏதேனும் வலயத்திற்கு, மாவட்டத்திற்கு அல்லது பிரிவுக்கு நியமிக்கப்பட்டவர்களான அனைவரையும் நியமிக்கப்பட்ட நேரத்தில் அத்தகைய சமாதான நீதவான்களின் வதிவிடம் எந்த பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதோ அந்த பிரதேச செயலாளர் பிரிவினுடைய அத்தகைய நிருவாக மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டவர்களாக கருதப்படுவதற்கும் சமாதான நீதவான்களின் பதவியை இடைநிறுத்துவதற்கு, இரத்துச்செய்வதற்கு மற்றும் முடிவுறுத்துவதற்கு அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்குவதனை இயலச்செய்வதற்கானதாகும்.*

ச. வ.- ஓ. 33/2017

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

***1***. இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

***2***. 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(i) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(2) அமைச்சரானவர் காலத்திற்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் பெயர் குறிக்கப்படும் அத்தகைய ஆட்களை இலங்கைக் குடியரசிற்கு அல்லது அமைச்சர் உசிதமானதெனக் கருதக்கூடியவாறான ஏதேனும் நிருவாக மாவட்டத்திற்கு, சமாதான நீதவான்களாக இருப்பதற்கென நியமிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் வலயத்திற்கு, மாவட்டத்திற்கு அல்லது பிரிவுக்கு சமாதான நீதவானுக்கான ஏதேனும் நியமனமொன்று, இக்காப்பு வாசகம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முன்னர் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய நியமனமானது, அத்தகைய வலயத்திற்கு, மாவட்டத்திற்கு அல்லது பிரிவுக்கான

நியமனத்தின் போது அத்தகைய சமாதான நீதவானின் வதிவிடம் எந்த பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்திருந்ததோ அந்த பிரதேச செயலாளர் பிரிவை உள்ளடக்குகின்ற இயைபான நிருவாக மாவட்டத்திற்குச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(ii) உட்பிரிவு (2) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(2அ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "நிருவாக மாவட்டம்" என்பது, (392 ஆம் அத்தியாயமான) நிருவாக மாவட்டங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நிருவாக மாவட்டம் எனப் பொருள்படும்.".

(iii) உட்பிரிவு (5) இனை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(6) அமைச்சரானவர், சமாதான நீதவானொருவரின் பதவியை இடைநிறுத்துவதற்கான, இல்லாதாக்குவதற்கான மற்றும் முடிவுறுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.